DEPOSITION OF WITNESS
IN THE SPECIAL COURT FOR TRIAL OF CASES
UNDER SC & ST(PoA) ACT, THOOTHUKUDI
Case No : **S.C. No.25/2023**
Prosecution Witness No.56

| | | |
|---|---|---|
| Name | : | திரு.அலெக்ஸான்டர் |
| Father's Name | : | பொன்ராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873 on the 17th day of August 2026.

**1 முதல் 15 வரையான எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டனர்.**

(மேன்மைமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை Crl.A(MD) No.494/2023 ல் 11.10.2023 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு படி எதிரிகள் அனைவரும் Observa Glass partition உள்ள தனி அறையில் இருக்க செய்யப்பட்டனர்–பதிவு செய்யப்படும் சாட்சியின் சாட்சியம் அவர்களுக்கு கேட்பதற்காக உரிய speaker facility மேற்படி அறையில் இருப்பது உறுதி செய்யப்பட்டது. நீதிமன்ற ஊழியர் திரு.சோமசுந்தரபாண்டியன் என்பவரும் மேற்படி அறையில் எதிரிகளுடன் technical தேவைக்காக அமர வைக்கப்பட்டார். மேற்படி மேன்மைமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை உத்தரவில் குறிப்பிட்டுள்ள படி சாட்சியால் எதிரிகளை பார்வையிட இயலாது என்பதும், அதே போல் ஆஜர்படுத்தப்பட்டுள்ள எதிரிகளாலும் சாட்சியை எப்பொழுதும் பார்வையிட இயலாத வகையில் இந்நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதும், இந்நீதிமன்ற அனுமதியுடன் எதிரிகள் அமர வைக்கப்பட்டுள்ள அறையினுள் பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள light arrangements ON செய்யப்பட்டால் மட்டுமே சாட்சியால் அருகில் சென்று எதிரிகளை பார்வையிட இயலும் என்பதும் அப்போதும் எதிரிகளால் அறையினுள் இருந்து சாட்சியை பார்க்க

இயலாது என்பதும் சாட்சிக்கு இந்நீதிமன்றத்தால் தெரிவிக்கப்பட்டது என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.)

<u>**சாட்சியம் பதிவு செய்ய ஆரம்பிக்கப்பட்ட நேரம் 15.40.**</u>

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்பொழுது திருச்செந்தூர் தாலுகா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2023ம் ஆண்டு சிப்காட் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். அவ்வாறு நான் பணிபுரிந்த காலத்தில் சிப்காட் காவல் நிலைய குற்ற எண்.48/2023 வழக்கில் இறந்துபோன முத்துகுமார் என்பவரது பிரேதத்தை பிரேத விசாரணைக்கு பின்னர் தூத்துக்குடி அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து 22.02.2023 அன்று 23.45 மணிக்கு தூத்துக்குடி ஊரக உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் உத்தரவு படி பெற்று தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவர் திரு.உதயகுமார் அவர்களிடம் ஆஜர்படுத்தி மறுநாள் 23.02.2023 அன்று பிரேத பரிசோதனை எண்.127/2023ன் படி பிரேத பரிசோதனை நடைபெற்றது. அதன் பின் இறந்த நபரின் உடலை அவரது உறவினர் வசம் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனைக்கு பின்னர் பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட டி சர்ட், ஜீன்ஸ் பேண்ட், முண்டா பனியன், ஜட்டி ஆகிய துணிகளை நான் பெற்று காவல் நிலையம் கொண்டு வந்து காவல் துணை கண்காணிப்பாளர் வசம் ஒப்படைத்தேன். மேற்படி பணிக்காக எனக்கு வழங்கப்பட்ட கடவுசீட்டு தான் தற்போது நான் பார்வையிடுவது. அது **அ.சா.ஆ.64**.

2. அதன் பிறகு பிரேத பரிசோதனையின் போது சேகரிக்கப்பட்டிருந்த இறந்த நபரின் இரத்தம், உள்ளுறுப்புகள் ஆகியவற்றை பிசிஆர்

நீதிமன்றத்திலிருந்து உத்தரவு பெற்று தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலிருந்து பெற்று திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து வந்துள்ளேன்.

3. அதன் பிறகு மேற்படி அதே வழக்கு சம்பந்தமாக கைப்பற்றப்பட்ட இரத்தம்பட்ட சொத்துக்களை தூத்துக்குடி பிசிஆர் நீதிமன்றத்திலிருந்து பெற்று அதற்கான உத்தரவுடன் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்துவிட்டு வந்துள்ளேன். அந்த பணிக்காக எனக்கு வழங்கப்பட்ட கடவுசீட்டு தான் தற்பொழுது நான் பார்வையிடுவது. அது **அ.சா.ஆ.65**. பின்னர் டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>1 முதல் 13 வரையான எதிரிகள் தரப்பு பொதுவான குறுக்கு விசாரணை</u>

1. நான் பார்வையிடும் அ.சா.ஆ.64 ல் என்னிடம் வழக்கு சொத்துக்கள் எதுவும் ஒப்படைத்ததாக மருத்துவர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.64,65 ஆகிய இரண்டு கடவுசீட்டுகளும் வேறுபாடுடன் உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.64 அரசு முத்திரை சின்னத்துடன் படிவம் 107 ஆணை எண்.650 உள்ளடக்கிய வடிவத்தில் இருக்கிறது மற்றொன்று மேற்படி விவரங்கள் எதுவும் இல்லாமல் இருக்கிறது என்றால் சரிதான்.

2. நான் பார்வையிடும் அ.சா.ஆ.65 எனக்கு 26.04.2023 அன்று காலை 08.00 மணிக்கு எனக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பார்வையிடும் அ.சா.ஆ.65 ல் சிறப்பு நீதிமன்ற தலைமை எழுத்தர் ஞானபிரகாசம் தேவராஜ் என்பவர் 28.04.2023 அன்று attended the court today received one acknowledgement from RFSL, Tirunelveli என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.64 ஐ எந்த தேதியில் காவல் துணை கண்காணிப்பாளர் வசம் ஒப்படைத்தேன் என்றால் பிரேத பரிசோதனை முடிந்த அன்றே ஒப்படைத்துவிட்டேன். அ.சா.ஆ.64 அதன் பின்பு மீண்டும் என் கை வசம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரிதான்.

3. நான் எந்த காலத்திலாவது தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலையத்தில் பணியாற்றுவதாக நீதிமன்ற தலைமை எழுத்தர்

ஞானபிரகாசம் தேவராஜ் வசம் கூறினேனா என்றால் இல்லை. நான் தென்பாகம் காவல் நிலையத்தில் பணியாற்றுவதாகவும், அதனால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக மேற்படி தலைமை எழுத்தர் கூறினாரா என்றால் கூறவில்லை. நான் வழக்கு சொத்துக்களை 26.04.2023 அன்று பெறாமல் 28.04.2023 அன்று பெற்று கொண்டதாக காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. 26.04.2023 அன்று பெற்று கொண்டதாக தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

4. திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகம் தூத்துக்குடி நீதிமன்றத்திலிருந்து ஒரு மணி நேர பயண தூரத்தில் இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி ஆய்வகத்தில் பொருட்களை கொண்டு சென்று ஒப்படைத்ததற்காக ஏதேனும் ஒப்புகை அட்டை வழங்கப்பட்டதா என்றால் கடவுசீட்டில் குறிப்பிட்டு தருவார்கள். நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் பொருட்களை ஒப்படைக்கவில்லை, நீதிமன்றத்தில் முன் கூட்டியே பொருட்களை பெற்றுவிட்டு அவற்றில் உயர் அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் சில மாற்றங்களை செய்து பின்னிட்டு ஒப்படைத்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரிக்கவில்லை என்றும், நான் எந்த பணியும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. இறந்த நபரின் உடலிருந்து அவர் வைத்திருந்ததாக அவரை அடையாளம் காட்ட கூடிய தனிப்பட்ட பொருட்களான பர்ஸ், செல்போன், அடையாள அட்டை, மோதிரம், வாகனத்தின் சாவி போன்ற பொருட்கள் என்னிடம் பிரேத பரிசோதனைக்கு பின்னர் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரிதான். பிரேத பரிசோதனைக்கு பின்னர் குறிப்பிட்ட பொருட்களை பெற்று கொண்டு வந்து டிஎஸ்பியிடம் ஒப்படைத்தேன் என்பதற்கு தனி அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொருட்களை ஒப்படைத்தேன் என்பதற்கு மருத்துவரும் கையெழுத்து எதுவும் போடவில்லை, நான் கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரிதான்.

**14 வது எதிரி தரப்பில் எதிரியே நேரடியாக மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்று கொள்வதாக தெரிவித்தார்.**

**15 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என எதிரியே நேரடியாக தெரிவித்தார்.**

**மறுவிசாரணை** இல்லை.

**சாட்சியம் முடிக்கப்பட்ட நேரம் 16.10.**

**Sd/–அலெக்ஸான்டர்**

என்னால் பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலையில் அமைந்துள்ள சிறப்பு நீதிமன்ற திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையெழுத்திட்டார்.

Sd/-P.V.Vasheethkumar
அமர்வு நீதிபதி,
பட்டியலில் கண்ட சாதியினர்
மற்றும் பட்டியலில் கண்ட
பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு)
சட்டத்தின் கீழான வழக்குகளை
விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம்,
தூத்துக்குடி.